# திராவிட இயக்கத்தின் நம்பிக்கை நட்சத்திரம்!



கழக வெள்ளி விழாவில் உதித்த உதயமே – கழக பவள விழாவின் இதயமே – அறிவு திருவிழாவில் வானமே – அஞ்சகத்த ஈன்றெடுத்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பெயரனே முத்து வேல் கருணாநிதி ஸ்டாலினின் உதயநிதியே

கழகம் எனும் கொள்கை படைக்கு தலைமை ஏற்க அர்ப்பணித்த துர்க்கை தாயின் தவப்புதல்வனே கோடிக்கணக்கான கழகத் தொண்டனின் இதய நாயகனே திராவிட இயக்கத்தின் நம்பிக்கை நட்சத்திரமாய் நாளை உலகை வழிநடத்த போகும் தமிழர் படைத்தலைவனே

அகநானூறு புறநானூறு இணைந்து புது திராவிட 400 படைக்கப் போகும் கலைஞரின் உதயநிதியே உனது ஒவ்வொரு பிறந்த நாளும் வரலாறு படைக்கும் பொன்னாளே

தந்தை பெரியாரும் நீயே, பேரறிஞர் அண்ணாவும் நீயே, முத்தமிழறிஞர் கலைஞரும் நீயே, பேராசிரியர் பெருந்தகையும் நீயே, இன்று நம்மை ஆளும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் மறு உருவமும் நீயே, நாளைய சமுதாயத்தை வழிநடத்த போகும் பேர் ஆளுமையும் நீயே, அறிவு திருவிழாவாய் ஆன்றோர் சான்றோர்களை எல்லாம் உயர்த்தி பெரு விழாவாக நடத்திக் காட்டிய கோடி இதயங்களின் கொள்கை நாயகன் நீயே

நூறாண்டு கடந்தும் வாழ்வாய் நீயே பகட்டான கொண்டாட்டங்களை தவிர்த்திடு கொள்கை பணியும் மக்கள் பணியும் ஆற்றிடு ஏழை எளிய மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட திருநங்கைகளையும் காத்திடு விளிம்பு நிலை சமூகத்தோடு ஒன்றி வாழ்ந்திடு அவர்களுக்கான உதவிகளை செய்திடு ஆங்காங்கே திட்டமிட்டு நடத்திடு அதுவே நமக்கு கூடுதல் மகிழ்ச்சி தரும் பிறந்தநாள் பரிசு

என்று உரைத்த திராவிடக் கருவூலமே இளைஞர் அணி கண்டறிந்த இருநூறுக்கும் அதிகமான இளம் பேச்சாளர் களை இயக்கத்திற்கு அளித்த இளைஞர் அணி சிகரமே சனாதன சங்கிகளின் சங்கருக்க வந்த இளம் பெரியாரே விளையாட்டுத் துறையில் குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை ஒளி மயமான வாழ்வை உருவாக்கி இந்தியாவுக்கு முன்மாதிரியாக தமிழ்நாட்டை மாற்றி அமைக்கும் துணை முதல்வரே

சர்வாதிகார மேகம் நம் நாட்டை சூழ்ந்து வருகிறது அதனை கலைக்க போவதும் உதயசூரியன் தான் உழைத்திடு உடன் பிறப்பே எனது அடுத்த பிறந்த நாளிலும் நம் கழகத் தலைவரே முதலமைச்சராய் தொடர்வார் என சூளுரைத்த இதய சூரியனே முத்தமிழின் உதயமே உனது பிறந்தநாள் கழகத் தொண்டனுக்கு கலைஞரின் உதய நாள் வரலாறு படைக்கும் துணை முதல்வரே வாழ்க வாழ்கவே இளமையோடு நூறாண்டு



**டாக்டர் சந்திரபாபு**
பொருளாளர்
கழக தலைமை இலக்கிய அணி

# உதயநிதி பிறந்தநாள் உற்சாகத் திருநாள்!

உதயசூரியன் வழித்தோன்றல் இளையசூரியன் வாழியவே
துணைமுதல்வர் பதவியிலே ஜொலிப்பவரே வாழியவே
கலைஞருக்கு புகழ்சேர்க்கும் கதிரவனே வாழியவே
தளபதியின் தலைமகனே தர்மராசா வாழியவே
துர்க்காஅம்மை ஈன்றெடுத்த தூயவரே வாழியவே
திராவிடத்தைக் காக்கவந்த சின்னவரே வாழியவே
தந்தைபெரியார் விரும்பிய சமூகநீதியே வாழியவே
அறிஞர் அண்ணா பேரனாக அருந்தமிழே வாழியவே
முத்துவேலர் பரம்பரையின் முத்தமிழே வாழியவே
தயாளுஅம்மா தாலாட்டை ரசித்தவரே வாழியவே
செம்மொழியைக் காக்கப்பிறந்த செந்தமிழே வாழியவே
தினவெடுத்த தோள்கொண்ட சிங்கமே வாழியவே
திரையுலகில் சாதித்த கலைமதியே வாழியவே
நாடாளப் பிறப்பெடுத்த மாமன்னன் வாழியவே
நட்புக்கு இலக்கணமாம் கர்ணனாக வாழியவே
அறிவுத்திருவிழா அரங்கேற்றிய அறிவுச்சுடரே வாழியவே
வள்ளலில் உயர்ந்தவனாம் பாரியாக வாழியவே
வீரத்துக்கு அடையாளம் விஜயாலயனாய் வாழியவே
ஆளுமையால் உலகுஆண்ட இராஜராஜனாய் வாழியவே
சனாதனம் ஒழிக்கவந்த திராவிடசிசு வாழியவே
ஏழையரின் வாட்டம்போக்கும் ஏந்தலே வாழியவே
இளைஞர்அணி தம்பிகளின் இதயவேந்தே வாழியவே
இலக்கியஅணி போற்றுகின்ற சங்கத்தமிழ் வாழியவே
பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலர் வாழியவே
இந்தித்திணிப்பை எதிர்த்திடும் எழுஞாயிறே வாழியவே



விளையாட்டு கண்மணிகளின் ஈகைவள்ளல் வாழியவே
பகைவெல்ல பாய்ந்திடும் வரிப்புலியே வாழியவே
கொஞ்சுமொழி தினம்பேசும் கொற்றவரே வாழியவே
அஞ்சுதல் அறிந்திடாத அரிமாவே வாழியவே
வற்றாத காவிரிபோல் வளம்சேர்க்க வாழியவே!
வாழியவே வாழியவே வாழ்வாங்கு வாழியவே!

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்





தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் தலைமையில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம் எல் ஏ அவர்கள் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி அறுசுவை உணவு வழங்கினார். உடன் அனைத்து நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் அத்திப்பட்டு ஊராட்சி திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்எம்.டி.ஜி. கதிர்வேல் ஏற்பாட்டில் அத்திப்பட்டு பஜார் பகுதியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மளிகை பொருட்கள் போர்வை அறுசுவை உணவு வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றிய பொறுப்பாளர் ஏ.ஆர்.டி.உதயசூரியன், நிர்வாகிகள் மு. கதிரவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, பா.செ.குணசேகரன், பா.து.தமிழரசன் உள்பட பலர் உள்ளனர்.

## எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாடு! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார்!

சென்னை, நவ.28-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் மாஸ். டி.வெங்கடேசன் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, 1000 பொதுமக்களுக்கு மதியம் சிக்கன் பிரியாணி வழங்கினார்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் எம்.கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி. திராவிட செல்வி, பி.சினிவாசன், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், எஸ்.எல்.சுந்தர், கி. தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.பி. ஆர்.ராஜன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் கலைவாணர், எஸ். எம்.பரசுராமன், எம்.விமலா, எ.மோகன், எஸ்.எம். அப்துல் ரகுமான், மணிமேகலை ஏழுமலை எம்.சி, ஜி.ராஜா, மீஞ்சுர் முகுந்தன், எஸ்.கென்னடி, கே.ஜானகிராமன், ஏ.தனசேகர், கே.கோதண்டம், வி.கார்த்திக், எம்.பி. கிளைமெண்ராஜ், எஸ்.வி.ரவி, கே. முருகன், ஓ.இ.அழகானந்தம், கே.காளிதாஸ், எஸ்.பாஸ்கர்,

என்.ராஜி, கே.ரேனுகா, பி.நாவலர்நகர் முருகன், கே.அருண்குமார், எஸ். பொன்ராஜ், எஸ்.பாஸ்கர். பி.முருகன், கே. யுவராஜ், எம்.ஆர்.பி. பழனி, என்பீடு துரைராஜ், எம்.சுசிலா, பி.விஜயா, ஜெ.சி. பீட்டர், என்.சுப்பராயலு, எஸ். சுப்ரமணியன், வழக்கறிஞர் கே. முரளி, எஸ்.சூரிய பிரபா, ஸ்டீல்மோகன், ஆர்.சிவகாமி, எச்.அம்பிகா, ப.தீபக், ஆர்.பத்மா, கே.எஸ். சுமதி, கே.செல்வி, ஜி.வி.கோபால், எம். மணிகண்டன், ஜி.சசிகுமார், எம். ரங்கநாதன், எம். பாலமுருகன், கே. பழனி, கார்த்திகேயன், என்.முருகேசன், இ. ரங்கநாதன், பி.யுவராஜ், டி. உதயபிரகாஷ், எஸ். பிரேம், எம்.மதன், ஜெ.கோபி, ஜார்ஜ், எம்.நடராஜன்,இ.பாலசுப்பிரமணிய, ஆர்.வ.மாசானமுத்து, ஆர். பழனி, எம்.ரவிச்சந்திரன், ஏ. மோகன், பாலு (எ) முகமது அலி, ஆர்.சீனிவாசன், ஜே. அருணா, கே. சுந்தர்ராஜன், பெ.வெங்கடேஷ், ஆதவன் ஆர்.ராஜா, பி. கணேஷ், ஜே.சி.பீட்டர், ஆர்.பொன்ராஜ், கே.விக்னேஷ், ஜே. ஜோஸ்வா, ஏ. இக்பால், எஸ். பிரதாப்சந்திரன், ஏ.எஸ். கோபால், எஸ். கார்த்திக், எம். திருமகள், ப.பிரேமா, ஆர்.பத்மா, டி. ரோஸின், எச். அம்பிகா, ஆர். சிவகாமி, கே.எஸ். சுமதி, ஏ.சுலோசணா, கே. சுமதி, ஜெ. ஜெயராஜ், ப.தீபக், கே. எஸ். பாலா, பி.டி. முருகன், என். வரதராஜன், பாரதி குமரன், என்.லாசர், எஸ்.பி.டி.ஷேக், ஏ.கே. முகமது சித்திக், எம். அய்யப்பா,

டி. பிரபு, கிருஷ்ணகுமார், எஸ்.குணசேகரன், கே. அர்பாபு, ஜி.உமா, பி. தன்ராஜ், நிலீமா ரவிகுமார், எம். நரேந்திரன், ஜி. ராஜேந்திரன், வி.மணிமாறன், ஆர். பழனி, டி.ஜெஸ்டின், எம் நரேஷ்குமார். ஜி. வாசுதேவன், விக்னேஷ், ஆர்.கோதண்டராமன், பி வீரா, காய்கறி முருகன், கே.பழனி, ஆட்டோகுமார், பி. ராம்குமார், எம். தியாகு, எஸ். சக்திவேல், வெல்டிங் சிவா, எம்.வீரதிலகம், எம்.குப்புசாமி, எம். குமரன், ஜி. லட்சுமணன், முகமது அலி, ஆர்.சீனிவாசன், ஆர்.ராபட், ஜெ. அருணா, சூரி, ஆர்.வி. மாசானதுரை, கே. ரவிசந்திரன், எம். குப்புசாமி, ஆ.மாரிமுத்து, கே. தாமஸ், பி.மணி, தன்ராஜ், ஆர். சம்பத்குமார், பி.ஆனந்தன், பாகமுகவர்கள், பாகபணியளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் காணொலி வாயிலாக ஆலோசனை வழங்குகிறார்!

# மயிலை கிழக்கு பகுதி வட்டச் செயலாளர் - பி.எல்.ஏ. 2 ஆலோசனைக் கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிவிப்பு!

சென்னை, நவ. 28-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மற்றும் BLA 2 ஆலோசனை கூட்டம் இன்று (28.11.2025) வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் மந்தைவெளி சிருங்கேரி மடம் சாலையில் உள்ள மகிழ் கன்வென்ஷன் ஹாலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட பொறுப்பு அமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காணொலி வாயிலாக ஆலோசனை வழங்குகிறார்.

மயிலை தேர்தல் பொறுப்பாளர் கோவி.லெனின் முன்னிலை வகிக்கிறார்.

எனவே இக்கூட்டத்திற்கு மயிலை கிழக்கு பகுதியைச் சார்ந்த வட்டக் கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள் மற்றும் BLA 2 நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி அறிவித்துள்ளார்.

## வட்டச் செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில்

# வேளச்சேரி 176 ‘அ’ வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

## வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. 600 பேருக்கு உணவு வழங்கினார்!

சென்னை, நவ. 28 -

சென்னை தெற்கு மாவட்டம் ,வேளச்சேரிமேற்கு ,176 (அ) வட்ட கழக சார்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி அவர்களின் பிறந்த நாள் விழாவை சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளரும்,மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி நேற்று (27.11.2025) காலை விஜயநகர் முதல் பிரதான சாலையில் வட்ட செயலாளர் கே.என். தாமோதரன் தலைமையில் இளைஞர் எழுச்சி நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் வேளச்சேரி மேற்கு பகுதி பொறுப்பாளர் 176 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே. ஆனந்தம் கலந்து கொண்டு கழக கொடியேற்றி 600 நபர்களுக்கு இனிப்புடன் கூடிய காலை உணவு வழங்கி சிறப்பித்தனர்.

இவ்விழாவில் மாவட்டக் கழக, பகுதி கழக,வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,மகளிரணியினர், பாக முகவர்கள், செயற்க்குழு உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள், பொது மக்கள் கலந்துகொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரிமேற்கு ,176 (அ) வட்ட கழக சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி வேளச்சேரி விஜயநகர் முதல் பிரதான சாலையில் வட்ட செயலாளர் கே.என். தாமோதரன் தலைமையில் மேற்கு பகுதி பொறுப்பாளர் வேளச்சேரி வே. ஆனந்தம் எம்.சி. கழக கொடியேற்றி 600 நபர்களுக்கு இனிப்புடன் கூடிய காலை உணவு வழங்கினார். இவ்விழாவில் மாவட்டக் கழக, பகுதி கழக,வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



இராயபுரம் சட்டமன்ற தொகுதி 49வது வார்டுக்கு உட்பட்ட P.A.K. பழனிசாமி மேல்நிலைப்பள்ளியில், 11–ஆம் வகுப்பு பயிலும் 451 மாணவர்களுக்கு, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் வட்டச் செயலாளர் காட்டன் சதீஸ்குமார் மற்றும் சௌந்தர பாண்டியன், மணிகண்டன், குமார் ஆகியோருடன் பள்ளியின் தாளாளர், செயலாளர், பொருளாளர், தலைமை ஆசிரியர், ஆசிரிய பெருமக்கள், மாணவர்கள் உள்ளிட்டோருடன் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# மயிலை மேற்கு பகுதி கழக - BLA 2 காணொலி காட்சி வாயிலாக ஆலோசனை கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, நவ. 28 -

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம் இன்று (28/11/2025 - வெள்ளிகிழமை) மாலை 4.00 மணியளவில் பாரதிதாசன் சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் நடைபெறுகிறது.

சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலையில் மருத்துவ மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மா .சுப்பிரமணியம் ஆலோசனை வழங்குகிறார்.

இதில் தொகுதி பார்வையாளர் கோ. வி.லெனின் தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பகுதி கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் ஜி ஆர் ராஜேந்திரன், துணைச் செயலாளர்கள் RLV அசோக் குமார், பா.பாகியதாஸ், அகல்யா விஸ்வநாதன், பொருளாளர் ஜி.முருகையன் வட்ட கழக செயலாளர்கள் டி ராஜவேலு , சீ. கிருஷ்ணமூர்த்தி, எஸ் ஆர் ராஜா சுரேஷ்குமார், ஆ நாகராஜன், மூ.இ. ஏழுமலை, மூ. இராஜேந்திரன்,மற்றும் , பாகப் பொறுப்பாளர்கள், BLA 2 அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு பணிமற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டக் கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விநாயகபுரம் மனநலம் குன்றிய சமர்ப்பணம் இல்ல மாணவர்களுடன் கேக் வெட்டி மதிய உணவு வழங்கி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது இதில் வட்ட செயலாளர் டி.சுந்தரம் மாவட்டம் மருத்துவரணி அமைப்பாளர் ஜி பார்த்தசாரதி இ ராமன் பிஎஸ்என்எல் தயாளன் எஸ்பி கண்ணன் ஏ வி முருகன் செண்பகராஜ் சக்கரபாணி ஹாப்பி ரகுமான் பகுதிகழகப் பொறியாளர் அணி அமைப்பாளர் எல் சண்முகம் கே நரேந்திரன் பிஎஸ்என்எல் குமார் உமா மகேஸ்வரி தரணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்டத்தில் மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படி, பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமனகுழு உறுப்பினர் சொ.வேலு முன்னிலையில், 78வது வட்ட செயலாளர் சு.மனோகர் தலைமையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்* அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கழக கொடியேற்றி, பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.